1973 மார்ச் 5]

மூடிவிடக்கூடிய நிலை ஏற்படும், ஆகவே, இதை ஒத்திவைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தையும் நினைவில் வைத்து ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is a general demand for up-to-date hair-dressing saloons even in rural areas. As the hair dressers are very poor, may I know whether help will be given to them by means of loans and bonus?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்பொழுது அந்த யோசனை ஏதும் இல்லை.

திரு. வி. மலைக்கண்ணன் : அவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் சலூன் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கியில் கடன் பெறுவதற்கு விண்ணப்பித் திருக்கிறார்கள். மத்திய கூட்டுறவு வங்கி அவர்களுக்குக் கடன் கொடுக்க அரசாங்கத்திடம் காரண்டி கேட்கிறது. அந்த காரண்டியைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதைப்பற்றியும் யோசிக்க வேண்டியிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, S.T.C. கோவிலில் எடுக்கும் முடியை எடுத்துக் கொள்ளும் காரணத்தால், இப்போது கோயில்களுக்கு முடி எடுக்க பிரார்த்தனை செய்து கொள்கிறவர்களுக்கு முடியிறக்கக்கூடியவர்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட இடத்திலே தான் முடியிறக்க வேண்டும் என்ற முறையிலே குறிப்பிட்ட முடி திருத்தம் செய்கிறவர்களை வைத்து இருக்கிறார்கள். அதனால் பெருமளவிற்கு முடி திருத்தம் செய் கிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அவர்கள் பிரச்சினையைப் பற்றி அரசு என்ன செய்ய உத்தேசித்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் அறநிலையப் பாதுகாப்புத் துறை அமைச்சர் என்று நினைக்கிறேன். தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. அ. தேவேந்திரன் : இப்பொழுது வளரக்கூடிய புதிய நாகரிகத்தின் காரணமாக முடிவெட்டிக்கொள்ளாமல் இருப்பதால் சலூன் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிப்பட்டவருடைய எண்ணத்தையோ நடவடிக்கையையோ நாம் கட்டுப்படுத்த முடியாது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுதே அந்தத் தொழிலாளர்களுக்குக் கூலி குறைவாகத்தான் கிடைக்கிறது. இந்த நேரத்திலே ஹிப்பி நாகரிகம் வேகமாக வளர்ந்து வருகிறது. அதனால் அவர்களுடைய தொழில் அதிகமாக பாதிக்கப்படுகிறது. எனவே ஹிப்பிகள் போன்று வளர்க்கப்படுகிற நாகரிகத்தை வளர விடாமல் தடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நான் முன்பே சொன்னது போல் யாருடைய தனிப்பட்ட நடவடிக்கையும் நாம் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தை நான் முழுக்க முழுக்க வரவேற்கிறேன். ஆனால் இதுபோன்ற பிரச்சினைகளில் தனிப்பட்ட முறையில் நாம் கட்டுப்படுத்துவதற்கில்லை.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இந்த சலூன் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே அரசு கடன் உதவிசெய்து வந்திருக்கிறது. மீண்டும், அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிற ஏழை எளிய தொழிலாளர்களுக்குக் கடன் உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இந்த அரசு எப்பொழுதுமே தொழிலாளர்களுடைய பிரச்சினையிலே அக்கறை காட்டிவருவதை அனைவரும் அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையைப் பற்றி ஆலோசிக்கப்படும்.

Chennasandiram Inam village

* 242 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have decided to take over the Inam village of Chennasandiram with its hamlets in **Hosur taluk;**

1973 மார்ச் 5]

(*b*) whether arrangements to survey these villages have been made; and

(*c*) the details thereof?

THE HON. THIRU P. U. SHANMUGAM: (*a*) to (*c*): There are two Chennasandiram Villages in Hosur taluk of Dharmapuri district. One Chennasandiram inam estate lies in between Hosur and Bagalur. It belongs to Marasandiram survey group. This estate was notified on 12th March 1965 and finally taken over by Government on 29th June 1972. In respect of this estate the High Court, Madras in their order, dated 21st July 1972 granted stay of operations under the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act 26 of 1963. Ryotwari settlement will be introduced in this estate after the High Court vacates the stay. The other Chennasandiram village (i.e.) Chennasandiram 'B' inam estate forms part of 177, Selavandoddi survey group. Ryotwari settlement was introduced in this village under the provisions of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 on 15th June 1972 and fair accounts have been handed over to the Revenue Department.

THIRU K. S. KOTHANDARAMIAH: I am referring only to Chennasandiram village that is lying between Hosur and Bagalur. That village has not been taken over and surveyed yet. So the people there are not able to get democratic facilities like loans for agricultural operations, etc. The inamdars are giving them lot of trouble. Will the Hon. Minister see to it that the village is taken over and survey conducted soon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதைப்பற்றி நீண்ட ஒரு சரித்திரமே இருக்கிறது. இந்த எஸ்டேட் குறித்து 1965 ஆம் ஆண்டு நாம் நோடிபிகேஷன் செய்திருக்கிறோம். அப்படி நோட்டிபிகேஷன் செய்ததற்குப் பிறகு உயர்நீதி மன்றத்திலே ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். என்ன ஆயிற்று என்று தெரியாமலே இனாம்தார் நிலத்தை திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு இனாம்தார் செட்டில்மெண்ட் ஆபீஸரிடத்திலே அதை மைனர் இனாமாக அறிவிக்கவேண்டுமென்று மனுப்போட்டார்கள். அப்படி அறிவிக்கப்பட்டவுடனே அப்பீல் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு இந்தச் சட்டம் செயல்படுவதை உயர்நீதி மன்றம் தடை-